***கவனிக்க.*** *- 01.02.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1797 - 2013 පෙබරවාරි මස 08 වැනි සිකුරාදා - 2013.02.08**

*1797 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## *பகுதி II - சட்ட சம்பந்தமானது*

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 22 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2013, மாச்சு மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# நானாவித அறிவித்தல்கள்

## கே. டீ. எம். சந்திரா பண்டார சமுதாய சேவைகள் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

சந்திராணி பண்டார ஜயசிங்க, பா. உ. ஆகிய நான் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "கே. டீ. எம். சந்திரா பண்டார சமுதாய சேவைகள் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

1. இனங்களுக்கிடையில் ஒற்றுமையையும் அமைதியையும் மேம்படுத்தல் ;
2. மக்கள் நாளாந்தம் முகம்கொடுக்கும் சுகாதார மற்றும் சட்டப் பிரச்சினைகளுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளல் ; அத்துடன்
3. சர்வதேச ரீதியில் ஒத்துழைப்புகளை கட்டியெழுப்புவதன் மூலம் பொருளாதார, அரசியல், கல்வி, கலாசார, சமூக துறைகளில் மேம்பாட்டினை ஏற்படுத்தல் மற்றும் அவை தொடர்பில் அறிவு மற்றும் புரிந்துணர்வை அதிகரித்தல் ;

பிறவும்.

சந்திராணி பண்டார ஜயசிங்க,
பாராளுமன்ற உறுப்பினர்.

2-286

---

## நீதிமன்ற அதிகாரம் (வணிகம்) நடைமுறைப்படுத்தல் தொடர்பாக கொழும்பில் நடாத்தப்படுகின்ற மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில்

கொடுக்கல் வாங்கல்களை முடித்து முடிவுக்குக் கொண்டுவருதல்.

விண்ணப்ப இலக்கம் : 49-2012 சீ.ஓ.

நணால, அவிசாவளை வீதி, அளுத் கெதர வத்தயில் அமைந்துள்ள "சுப்பர் அப்பரல் குரூப் (தனியார்) லிமிட்டெட்" சம்பந்தப்பட்ட விடயத்திலும் ;

மற்றும்

2007 ஆம் அண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டமூலம் பிரிவு XII இன்கீழ் நீதிமன்றின் மூலம் கணக்குகளை முடித்து முடிவுக்குக் கொண்டு வருதல் சம்பந்தமாக மனு கோரிக்கை விடயத்திலும் ;

"சுப்பர் அப்பரல் குரூப் (தனியார்), அளுத்கெதர வத்த, அவிசாவெல வீதி, நணால.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனம் கொழும்பு சிவில் நீதிமன்ற அதிகார வலயத்துக்குட்பட்ட கொழும்பு மேல் நீதிமன்றத்தில் கொடுக்கல் வாங்கலை நிறைவு செய்து முடித்து விடுவதற்காக, நணால, அவிசாவளை வீதி, அளுத்கெதர வத்தை "சுப்பர் அப்பரல் குரூப்" தனியார் லிமிட்டட் நிறுவனம் 2012 ஆம் வருடம் நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளதாகவும்,

அந்த மனு மீதான விசாரணை 2012, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி அன்று விசாரணைக்கு எடுப்பதற்கு ஆணை பிறப்பிப்பதாகவும், மனு தொடர்பான ஆணை கட்டளை விடுப்பதற்கான இணங்குவோர் எதிர்ப்போர், மேற்குறித்த நிறுவனத்தில் கடனாளிகளாகவோ, பங்குதாரர்களாகவோ இருப்பின் தாமாகவோ தமது சட்ட ஆலோசகரூடாகவோ, சட்டத்தரணியூடாகவோ அந்த மனுவின் விசாரணையின்போது சமுகமளிக்க முடியுமெனவும் அந்த மனுவின் பிரதியைப் பெற்றுக்கொள்வதற்காக உரிய கொடுப்பனவைச் செலுத்திய பின் அந்தப் பிரதி தேவைப்படுகின்ற அந்த நிறுவனத்தின் கடனாளிகளுக்கு அல்லது பங்காளிகளுக்கு கீழ் ஒப்பமிடுபவரினால் வழங்கப்படுமெனவும் இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

ஜீ. சீ. குணவர்தன,
மேல் நீதிமன்ற சட்டத்தரணி - பொது நொத்தாரிசு,
இலக்கம் 15, ச. ண. ச. சட்டத்தரணிகள் அலுவலகத் தொகுதி,
கம்பஹா.

**குறிப்பு** : மேற்குறிப்பிட்ட மனு விசாரணையின்போது சமுகமளிப்பதற்கான தேவையுடையோர் யாரேனுமிருப்பின் தமது விருப்பத்தை எழுத்து மூலம் மேற்குறித்த சட்டத்தரணி ஜீ. சீ. குணவர்தனவிடம் நேரில் சமுகமளித்து சமர்ப்பிக்கலாம் அல்லது தபால் மூலம் அனுப்பி வைக்கலாம். அவ்வறிவித்தலில் தமது பெயர் விலாசம் குறிப்பிடப்படல் வேண்டும். வர்த்தக நிறுவனமாயின் பெயர் விலாசம் குறிப்பிடப்பட்டு அந்த தனியாட்கள் அல்லது நிறுவனத்தின் சட்டத்தரணி யூடாக கையொப்பமிடப்பட்டு மேற்குறிப்பிட்ட விலாசத்துக்கு 2013, பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதி பி. ப. 6.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ, தபால்மூலமாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஜீ. சீ. குணவர்தன,
மனுதாரரின் சட்டத்தரணி.

2-323

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.